மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வாடிப்பட்டி, மதுரை மாவட்டம்.

முன்னிலை: திரு.D.ராம்கணேஷ் M.A., M.L.,

மாவட்ட உரிமையியல் நீதிபதி.

2022ம் வருடம் மார்ச் மாதம் 17ம் நாள்

ஸ்ரீபிலவ ஆண்டு பங்குனி மாதம் 03 ம் நாள் வியாழக்கிழமை

CNR No. TNMD19000055-2020

I.A . No. 457/2020

in

O.S. No. 35/2020

க. நாகலிங்கம்

..... மனுதாரர்/வாதி

//எதிர்//

1) ப. கருப்பு என்ற கருப்பையா
2. சு. பொன்னுச்சாமி
3. வெ. மகாமணி
4. வீ. மகாமணி
5. ச. பொன்னர்
6. ம. மாரியப்பன்
7. அ. பிச்சையம்மாள்
8. கா. கர்ணன்
9. சி. அசோக்குமார்
10. க. பெரியகருப்பு என்ற சீவட்டி
11. பெ. ராஜமாணிக்கம்
12. மு. பிரேம்குமார்

.... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு 23.06.2020ம் தேதி விசாரணைக்கு எடுக்கப்பட்டு, மனுதாரர்/வாதி தரப்பில் திரு.T.K. கோபாலன் மற்றும் திரு.M.விஜயகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருC. தீபக் அவர்கள் ஆஜராகியும், கடந்த 02.03.2022ம் தேதி இந்நீதிமன்றத்தில் இறுதியாக விசாரணைக்கு வந்தபோது, இருதரப்பும் கேட்கப்பட்டும், ஆவணங்களைப் பரிசீலனை செய்தும் இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடலான...

உத்தரவு

இந்த நிர் மனுவும் மனுதாரர்/வாதியால், மனுசொத்தில் மனுதாரர்/வாதியின் பூசாரி உரிமைக்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, அவரது முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1. மனுவின் சுருக்கம்:

மனுதாரர் அசல் வழக்கின் வாதி என்றும், மனு சொத்தானது மனுதாரர்/வாதியின் தாத்தா நாகுக்குடும்பன் மற்றும் பிச்சைக்குடும்பன், கூத்தக்குடும்பன், பாப்பக்குடும்பன், பழனியாண்டிக்குடும்பன், சந்தனக்குடும்பன் ஆகியோர்கள் சேர்ந்து கச்சைகட்டி கிராம பள்ளர்களுக்கு பொதுவாக உள்ள ஊர்கால சுவாமி கோவிலுக்காகவும், அதில் கோவில் மற்றும் பிரகாரம் கட்டிக்கொள்வதற்காகவும் மேற்படி கோவிலின் பக்கம் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருக்கும் சின்னணன் சுவாமி கோவிலுக்காகவும் மேற்படி டிரஸ்டிகளின் பெயரில் தானியேல் உபாத்தியாரிடமிருந்து பதிவு பெற்ற கிரைய பத்திரம் மூலம் கடந்த 18.03.1941ம் தேதியில் காலியிடமாக கிரையம் பெற்றுள்ளார்கள் என்றும், மேற்படி கச்சைக்கட்டி கிராமத்தில் வடக்கு மற்றும் தெற்கு தெருவில் பள்ளர் இன மக்கள் வசித்து வந்ததால், தெற்கு தெருவில் ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவிலும், வடக்கு தெருவில் மாரியம்மன் கோவிலும் கட்டுவதற்கும் மனு சொத்தின் வடபுரம் ஊர்காவலன் கோவிலும், தென்புரம் சின்னணன் சுவாமி கோவிலும் கட்டுவதற்கும் டிரஸ்டிகளால் முடிவு செய்யப்பட்டது என்றும், மேற்படி 6 டிரஸ்டிகளில் பிச்சைக்குடும்பன், கூத்தக்குடும்பன், பாப்பக்குடும்பன், பழனியாண்டிக்குடும்பன் ஆகிய நால்வரும் வடக்கு தெருவில் மாரியம்மன் கோவிலுக்கு டிரஷ்டியாகவும், பூசாரியாகவும் இருந்து பராமரிப்பு செய்வதற்கும், மனுதாரர்/வாதியின் தாத்தா நாகுக்குடும்பனும், சந்தனக்குடும்பனும் தெற்கு தெருவில் ஸ்ரீசக்திமாரியம்மன் கோவிலுக்கு டிரஷ்டியாகவும், பூசாரியாகவும் இருந்து பராமரிப்பு செய்வதற்கும் முடிவு செய்யப்பட்டது என்றும், அதன்படி மனுதாரர்/வாதியின் தாத்தா நாகுக்குடும்பன் மனுச்சொத்தில் தனது சொந்த செலவில் 1946ம் ஆண்டு சின்னணன் சுவாமி கோவிலை கட்டியபோது, சந்தனக்குடும்பன் அதற்கு உறுதுணையாக இருந்துள்ளார் என்றும், சந்தனக்குடும்பனுக்கு வாரிசுகள் ஏதும் இல்லாததாலும், நாகுக்குடும்பன் இறப்பிற்கு பின்னர் அவரது இரு ஆண் வாரிசுகளில் ஒருவர் திருமணமாகாமலே இறந்து விட்டதாலும், மனுதாரர்/வாதியின் தந்தை நாகுக்குடும்பனின் இறப்பிற்கு பின்னர் மனுச்சொத்தில் உள்ள கோவிலின் பரம்பரை பூசாரி மற்றும் டிரஸ்டியாகவும் அவருக்குப்பின் மனுதாரர்/வாதியே செயல்பட்டு வந்துள்ளார் என்றும், மேற்படி மனுதாரர்/வாதியின் தந்தைக்கு வாதி மற்றும் பழனிச்சாமி என்ற கணேசன், மற்றும் மருதையா என்ற மூன்று ஆண் வாரிசுகள் ஆவார்கள் என்றும், கருப்பையாவின் வாரிசுகளில் மூத்த ஆண் வாரிசு என்ற அடிப்படையில்,

கருப்பையாவின் இறப்பிற்கு பின்னர் 2008ம் ஆண்டிலிருந்து மனுதாரர்/வாதி தாவா சொத்தில் உள்ள கோவிலுக்கு பரம்பரை பூசாரியாகவும், டிரஸ்டியாகவும் இருந்து கோவில் பணி செய்து வருவதுடன் திருவிழாக்காலங்களில் மனுதாரர்/வாதியும் அவரது சகோதரர்களும் இணைந்து கோவில் திருப்பணிகளை செய்து வந்துள்ளனர் என்றும், அவ்வாறு மனுசொத்தில் உள்ள கோவிலில் நடைபெறும் திருவிழாக்களுக்கு மனுதார்/வாதி திருப்பணிக்குழு தலைவராக இருந்து வந்ததின் அடிப்படையில், திருவிழா நடத்துவதற்கு மனுதாரர்/வாதியின் வேண்டுகோளுங்கிணங்க காவல்துறை பாதுகாப்பு, தேர்தல் காலத்தில் பங்குனி மாத திருவிழா நடத்துவதற்கு தேர்தல் நடத்துனர் அலுவலரின் அனுமதியும், இந்து சமய அறநிலையத்துறையால் திருப்பணி நிதியுதவியாக ரூ.50,000/-ம், வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும், ஆடல் பாடல் நிகழ்ச்சி நடத்துவதற்கு மனுதாரர்/வாதியால், சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் ரிட் மனு எண் 7850/2018ன்படி மனு தாக்கல் செய்து நிபந்தனையின் பேரில் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது என்றும், மேலும் மனுச்சொத்தில் உள்ள மின் இணைப்பிற்கு மனுதாரர்/வாதி தான் மின்கட்டணம் செலுத்தி வருகின்றார் என்றும், மேற்படி விபரங்கள் அனைத்தும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளுக்கும் அப்பகுதியில் உள்ள மக்களுக்கும் நன்கு தெரியும் என்றும், மனுதாரர்/வாதிக்கும் அவரது சகோதரர்களுக்கும் தனித்து பாத்தியப்பட்ட சர்வே எண்கள் 1767, 1773/39ல் கட்டுப்பட்ட இடத்தில் கிராம ஊராட்சி மன்ற தலைவர் தன் அதிகாரத்தை பயன்படுத்தி கழிவுநீர் சாக்கடையும், பேவர் பிளாக்கும் அமைக்க முயற்சி செய்தபோது, மனுதாரர்/வாதி தடுத்ததால், முன்விரோதம் கொண்ட கிராம ஊராட்சி மன்ற தலைவர் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை தூண்டிவிட்டு மனுச்சொத்தில் மனுதாரர்/வாதிக்கு பாத்தியமான பரம்பரை பூசாரி மற்றும் டிரஸ்டு உரிமையை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தங்களுக்கு எழுதிக்கொடுக்க வேண்டுமென்று மிரட்டியதால், கடந்த 14.04.2020ம் தேதியிட்டு மனுதாரர்/வாதியால் வாடிப்பட்டி காவல் நிலையத்தில் புகார் மனு கொடுக்கப்பட்டது என்றும், மேற்படி காவல்நிலைய விசாரணையில், மனு விசாரணை முடியும் வரை எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என அனுப்பிய போதும், தொடர்ச்சியாக எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் பரம்பரை பூசாரி மற்றும் டிரஸ்டி உரிமையை கேட்டு கடந்த 04.06.2020ம் தேதியில் மிரட்டியபொழுது மனுதாரர்/வாதி காவல்நிலையத்திற்கு சென்றபோது உரிமையியல் பிரச்சனை என்பதால் உரிமையியல் நீதிமன்றத்தை அணுகுமாறு அறிவுறுத்தி விட்டார்கள் என்றும், அசல் வழக்கில் மனுதாரர்/வாதிக்கு நல்ல வியாஜ்ஜியமும், முகாந்திரமும் உள்ளது என்றும், தாவா கோவிலில் பூசாரி மற்றும் டிரஸ்டி உரிமை மனுதாரர்/வாதிக்கு மட்டும் உள்ள நிலையில், அதில் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் இடையூறு செய்து வருவதால், மனுதாரர்/வாதி குடும்பத்தாருக்கு பெருத்த கஷ்ட நஷ்டம் ஏற்பட்டதுடன் மனுதாரர்/வாதியின் பூசாரி உரிமைக்கு பாதிப்பு ஏற்பட்டு மனுச்சொத்தினை பராமரிக்க இயலாத நிலை ஏற்பட்டு விடும் என்பதால், அசல் வழக்கு விசாரணை முடியும் வரை மனுச்சொத்தில் உள்ள கோவில்களுக்கு பரம்பரை பூசாரியாக செயல்பட்டு வருவதற்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, அவரது

முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமென வாதுரைக்கப்பட்டது.

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையை இம்மனுவிற்கு எதிர்உரையாக பாவித்துக்கொள்ள குறிப்பாணை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) பிரதிவாதிகள் தரப்பு எதிர் வழக்குரையின் சுருக்கம்

மனுவில் கண்டுள்ள விபரங்கள் தவறானது ஆகும். ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் கட்டுவதற்காக வாதியாலோ அவர்களது முன்னோர்களாலோ எவ்வித பங்களிப்பும் அளிக்கவில்லை. தெற்கு தெருவில் உள்ள ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் தெற்கு தெரு கிராம மக்களிடமும், வடக்கு தெருவில் உள்ள மாரியம்மன் கோவில் வடக்கு தெரு கிராம மக்களிடமும் வரி வசூல் செய்து கட்டப்பட்டதாகும். கோவில் கட்டுவதற்கு முன்பே திருவிழா நடத்த பொது மக்களிடம் வசூலித்த பணத்தை வாதியின் தந்தை மோசடி செய்ததாக கிராம மக்களால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டதால், வாதியின் தந்தை ஊருக்குள் குடியிருக்காமல் தோட்டத்தில் வசித்து வந்தார். வாதி குறிப்பிடுவது போல் வாதியோ அவரது தந்தையோ அல்லது தாத்தாவோ தாவா கோவிலுக்கு பூசாரியாகவோ, அறங்காவலராகவோ பொறுப்பில் இருந்தது இல்லை. வாதி குறிப்பிடுவது போல் திருவிழா நடத்துவதற்கான அனுமதி எதனையும் வாதி பெறவில்லை. மேற்படி அனுமதி அனைத்தும் கிராம பொது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட 1,2ம் பிரதிவாதி வகையறாவால் மட்டுமே பெறப்பட்டு திருவிழா நிகழ்ச்சிகள் நிகழ்த்தப்பட்டது. வாதி தரப்பில் கூறப்படுகின்ற வாதியின் சகோதரரால் நடத்தப்பட்டதாக சொல்லப்படும் விஷயங்கள் அனைத்தும் கிராம மக்களால் மட்டுமே நடத்தப்பட்டது. மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து உள்ள இடத்தில் தான் ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் அமைந்துள்ளது. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுவில் இந்து சமய அறநிலையத்துறையின் அறிக்கையில் சின்ன மாரியம்மன் கோவில் என குறிப்பிடப்பட்டுள்ளது. வழக்கு சொத்திற்கும் இதற்கும் சம்மந்தமுமில்லை. வாதி குறிப்பிடுவது போல் காவல்துறையில் பிரதிவாதிகள் மீது புகார் கொடுக்கப்பட்டது உண்மை. ஆனால் மேற்படி புகார், பொய் புகார் என்றும், அதில் எவ்வித முகாந்திரமும் இல்லை எனவும், அதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்யப்படவில்லையெனவும், மேற்படி புகார் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது. மேலும் கோவில் நிர்வாகத்தின் பொறுப்பு இந்து சமய அறநிலையத்துறை மற்றும் கிராம பொதுமக்களால் 1ம் பிரதிவாதி வசம் ஒப்படைக்கப்பட்டு, அதற்கான அடையாள அட்டையும் வழங்கப்பட்டுள்ளது. மேலும் 2,3,5,6 பிரதிவாதிகள் கோவில் கரகம் ஜோடிக்கும் பொறுப்பினையும், 3ம் பிரதிவாதி கோவில் பெட்டி தூக்கும் பொறுப்பினையும், 7,11 மற்றும் 12ம் பிரதிவாதிகள் கோவில் வரி வசூல் செய்து வரவு செலவு பொறுப்பினையும் பரம்பரை பரம்பரையாக செய்து

வந்துள்ளனர். கோவில் டிரஸ்டிகள் 6 நபர்களில் பிச்சைக்குடும்பன், கூத்தக்குடும்பன், பாப்பக்குடும்பன் ஆகியோர் வடக்கு தெருவிலும், பழனியாண்டிக்குடும்பன், சந்தனக்குடும்பன், நாகுக்குடும்பன் ஆகிய மூவரும் தெற்கு தெருவிலும் உள்ள நிலையில், சந்தனக்குடும்பன் மற்றும் நாகுக்குடும்பனால் கோவில் கட்டுவதற்கு எவ்வித வரியும் பங்களிப்பு கொடுக்கவில்லை. தாவா சொத்தில் உள்ள கோவிலுக்கு பழனியாண்டி குடும்பன் மற்றும் அவரது மகனான 1ம் பிரதிவாதி மட்டுமே பரம்பரை பூசாரியாக பணியாற்றி பராமரித்து வருகின்றார். தாவா சொத்தில் உள்ள ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில், ஊர்காவலன் கோவில் மற்றும் சின்னணன் சுவாமி கோவிலை 1946ம் ஆண்டு கிராம மக்கள் அனைவரும் வரிபோட்டு கட்டியும், பின்னர் புதுப்பித்தும் கட்டி கும்பாபிசேகம் நடத்தியுள்ளார்கள். தாவா சொத்தில் ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில், ஊர்க்காவலன் கோவில், சின்னணன் சுவாமி மட்டுமே உள்ளது. வாதி குறிப்பிடும் சிலைகள் வழக்கு சொத்திற்கு அப்பால் உள்ளது. திருவிழா காலங்களில் தாவா கோவிலுக்கு காப்பு கட்டுதல், பொங்கல் வைத்தல், அபிஷேகம் செய்தல், கரகம் தூக்குதல், போன்ற திருவிழா சம்ந்தப்பட்ட அனைத்து நிகழ்ச்சிகளிலும் பூசாரி மற்றும் டிரஸ்டி பணிகளை பழனியாண்டி குடும்பன் மகனான 1ம் பிரதிவாதியே செய்வார். தாவா சொத்திலுள்ள மின் இணைப்பு எண் பழனியாண்டி குடும்பன் பெயரிலே உள்ளது. உறுப்பினர்களில் மின் கட்டணத்தை யார் வேண்டுமானாலும் செலுத்தலாம். ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவிலின் திருவிழா காலங்களில் ஆடல், பாடல் கலை நிகழ்ச்சிக்கான அனுமதியை கிராமத்தில் எவரேனும் வாங்கி வருவது வழக்கம். தாவா சொத்தில் உள்ள கோவிலை கட்டுவதற்கு கிராம மக்கள் குடும்பமாக கட்டிட வேலை பார்த்தபோதும், அதில் வாதியின் தாத்தாவான நாகுக்குடும்பனோ அவரது வகையறாவோ யாரும் பங்கேற்கவில்லை. தாவா சொத்தில் உள்ள கோவிலுக்கு 1ம் பிரதிவாதி மட்டுமே பரம்பரை பூசாரி மற்றும் டிரஸ்டியாக இருந்து வருவது மேற்படி கிராமத்தில் உள்ள அனைத்து சமுதாய மக்களுக்கும் நன்கு தெரியும் என்பதால், வாதி தாக்கல் செய்துள்ள இம்மனு மற்றும் பிராதினை தள்ளுபடி செய்யும்படி வேண்டப்பட்டது.

3) மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட இந்த மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே தீர்வு காண வேண்டியது பொருண்மை ஆகும்.

<u>தீர்வு:-</u>

4) இரு தரப்பு வாதுரைகள் மற்றும் வழக்கு கோப்புகளை பரிசீலனை செய்ததில், இந்த நிர் மனுவும் மனுதாரர்/வாதி தரப்பில் தாவா சொத்து விபரத்தில் அடங்கியுள்ள கோவில்களில் வாதி பூசாரி மற்றும் பரம்பரை டிரஸ்டியாக செயல்பட்டு வருவதை பிரதிவாதிகள் எவ்வித இடையூறும் செய்யக்கூடாது என அசல் வழக்கில் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மேற்படி அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இது தொடர்பாக இருதரப்பு வாதுரை மற்றும் அசல் வழக்கு பிராதினை பரிசீலனை செய்தபோது, அசல் வழக்கு பரிகாரமாக அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.
“வாதி வழக்கிடைச்சொத்தில் உள்ள கோவில்களுக்கு பரம்பரை பூசாரியாக செயல்பட்டு வருவதற்கு பிரதிவாதிகளோ, அவரது ஆட்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும்” எனக்குறிப்பிட்டு, அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த நிர் அசல் வழக்கும் கச்சைகட்டி கிராமத்தில் வடக்குத்தெரு மற்றும் தெற்குத்தெருவில் பள்ளர் இன சமூகத்தை சேர்ந்த மக்கள் வசித்து வருகிறார்கள் என்றும், மேற்படி மனுதாரர் / வாதி மற்றும் அவரது முன்னோர்கள் மற்றும் மேற்படி சமூகத்தை சேர்ந்தவர்களால் தாவா சொத்து மற்றும் அதனருகே கோவில்கள் அமைக்கப்பட்டு வழிபாடு செய்யப்பட்டு வருகிறது என்றும், கோயில் பராமரிப்பு மற்றும் வழிபாட்டிற்காக தாவா சொத்தானது மேற்படி மனுதார்/வாதியின் முன்னோர்களால் மற்றும் சில நபர்கள் பெயரில் டிரஸ்டி என்ற அடிப்படையில் கிரையம் வாங்கப்பட்டு, மேற்படி கோயில் வழிபாட்டுக்காக பயன்படுத்தப்பட்டு வருகின்றது என்றும், அதில் பிரதிவாதிகள் இடையூறு செய்து வருவதால் இந்த நிர் அசல் வழக்கு மற்றும் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் வாதம் செய்யப்பட்டது.

6) மேலும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தானது கச்சைக்கட்டி கிராமத்தில் அமைந்துள்ளது என்பதும் மேற்படி கிராமத்தில் வடக்குத்தெரு மற்றும் தெற்குத்தெருவில் பள்ளர் இனத்தை சேர்ந்த மக்கள் வசித்து வருகிறார்கள் என்பதும் மறுக்கவில்லை என்றும், அதேபோல் மேற்படி பள்ளர் இன மக்கள் வழிபாட்டிற்கு தாவா இடத்தை ம.சா.ஆ.1ன்படி 18.03.1941ம் தேதியில் கிரையம் பெறப்பட்ட விபரத்தையும் மறுக்கவில்லை என்றும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் தாவா சொத்தில் உள்ள கோவில்களில் மனுதாரர்/வாதியோ அல்லது அவரது முன்னோர்களோ எந்த காலக்கட்டத்திலும் பூசாரியாகவோ அல்லது பரம்பரை டிரஸ்டியாகவோ செயல்பட்டு வந்ததில்லை என்றும், தாவா சொத்தில் கோவில் கட்டுவதற்காக ஏற்பாடு செய்யும்பொழுது, மனுதார்/வாதியின் தந்தை வரி வசூல் செய்ததில் மோசடி செய்ததால், அது தொடர்பாக ஊர் பொது மக்களால் முடிவு செய்து மனுதார்/வாதியின் தந்தையை ஒதுக்கி வைத்தார்கள் என்றும், மேலும் வாதியோ அவரது குடும்பத்தார்களோ தாவா சொத்தில் அமைந்துள்ள கோவில்கள் கட்டுவதற்கும், திருவிழா நடத்துவதற்கும் எவ்வித வரியோ, அல்லது நன்கொடையோ கொடுக்கவில்லை என்றும், தாவா சொத்தில் அமைந்துள்ள கோவிலுக்கு பழனியாண்டிக்குடும்பன் மகனாகிய 1ம் பிரதிவாதி மற்றும் இதர ஊர் மக்கள் சேர்ந்தே வரிவசூல் செய்தும், நன்கொடை பெற்றும் திருவிழாக்களை நடத்தி வருகின்றார்கள் என்றும் எதிர்வாதம் செய்யப்பட்டது.

7) இருதரப்பு வாதுரைகளின்படி தாவா சொத்துகளில் கோவில்கள் அமைந்துள்ளது

என்பதும், தாவா சொத்தில் அமைந்துள்ள கோவில்களில் தொடர்ச்சியாக திருவிழாக்கள் நடத்தப்பட்டு வருவதும் இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது. தாவா சொத்தில் அமைந்துள்ள கோவில்களுக்கு 1ம் பிரதிவாதியானவர் பூசாரி மற்றும் பரம்பரை டிரஸ்டியாக செயல்பட்டு வந்ததாக எதிர்வாதம் செய்திருந்த போதிலும் அது தொடர்பான ஆவணங்கள் எதனையும் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் எதிர்வழக்குரை தாக்கல் செய்யும்போதோ அல்லது இம்மனு விசாரணையின் போதோ தாக்கல் செய்யப்படவில்லை என்பது தெரியவருகிறது.

8) மேலும் இது தொடர்பாக பரிசீலனை செய்யும்போது அசல் வழக்குடன் தாக்கல் செய்யப்பட்ட 1வது ஆவணமாகிய 18.03.1941ம் தேதியிட்ட கிரைய பத்திரத்தில் "ஊர்காலசுவாமி கோவிலுக்காகவும், மேற்படி கோவிலின் பக்கத்தில் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருக்கும் சின்னணன் சுவாமி கோவிலுக்குமாகப் பூசாரியும் டிரஸ்ட்டியுமான மேற்படியூரிலிருக்கும் அய்யனார் குடும்பன் மகன் பள்ளர் பயிர் பிச்சைக்குடும்பன் (1) மேற்படியூரிலிருக்கும் பழனியாண்டி குடும்பன் மகன் மேற்படி அழகி கூத்தக்குடும்பன் (2) மேற்படியூரில் இருக்கும் மாலைக்காரக்குடும்பன் மகன் மேற்படி பாப்பக்குடும்பன் (3) மேற்படியூரிலிருக்கும் சுப்பக்குடும்பன் மகன் மேற்படி பழனியாண்டிக்குடும்பன் (4) மேற்படியூரிலிருக்கும் கருப்பணக்குடும்பன் மகன் மேற்படி நாகுக்குடும்பன் (5) மேற்படியூரிலிருக்கும் சின்னையக்குடும்பன் மகன் மேற்படி சந்தனக்குடும்பன் (6) பேர்கள் மேற்படி கோவில்களுக்காக இந்த ஆறு டிரஸ்ட்டிகளுக்கு " என்றும், அதேபோல் "எனக்கு கிரைய பாத்தியமான அடியிற்கண்ட மனையை நாளது தேதியில் மேற்படி கோவில்களுக்காக டிரஸ்ட்டிகளாகிய உங்களுக்கு நான் ரூ.7க்கு கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுக்கிறேன்" என்றும் குறிப்பிட்டுக் கிரைய பத்திரம் பதிவு செய்து கொடுத்துள்ளது தெரியவருகிறது. மேலும், மேற்படி 6 நபர்களில் நாகுக்குடும்பன் என்பவரது மகன் வாதி என்பதும், பழனியாண்டிகுடும்பன் என்பவரது மகன் 1ம் பிரதிவாதி என்பதும் வழக்கு கோப்புகளிலிருந்து தெரியவருகிறது. எனவே மேற்படி கிரைய பத்திரத்தின்படி 1941ம் வருடமே வாதியின் முன்னோர்கள் தாவா கோவிலில் டிரஸ்டி மற்றும் பூசாரியாக இருந்து வருவது தெரியவருகிறது.

9) மேலும் இருதரப்பு வாதுரைகளின்படி, மேற்படி கச்சைக்கட்டி கிராமத்தில் வடக்கு தெரு மற்றும் தெற்கு தெருவில் கோவில்கள் அமைக்கப்பட்டுள்ளது என்பது ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது. அதில் வடக்கு தெருவில் அமைந்துள்ள கோவில்கள் தொடர்பாக வழக்கு தரப்பினர்களுக்கிடையே எவ்வித தாவாவும் இல்லை என்பது தெரியவருகிறது. அதேபோல் தெற்கு தெருவில் அமைந்துள்ள ஸ்ரீசக்திமாரியம்மன் கோவில் மற்றும் அதன் அருகே அமைந்துள்ள ஊர்காவலன் கோவில், சின்னணன் சாமி கோவில் ஆகிய கோவில்களில் நடைபெறும் திருவிழாக்களை நடத்தும் பொறுப்பு மற்றும் பூசாரி முறை மற்றும் பரம்பரை டிரஸ்டி தொடர்பாக மட்டுமே வழக்கு தரப்பினர்களுக்கிடையே தாவா ஏற்பட்டுள்ளது என்பது

தெரியவருகிறது. இது தொடர்பாக மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்யும்பொழுது, ம.சா.ஆ.1 ஆக 18.03.1941ம் தேதியிட்ட கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகலாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேற்படி ம.சா..ஆ.1 ஆவணத்தில் வழக்கு தரப்பினர்களின் முன்னோர்கள் மற்றும் சில நபர்கள் சேர்ந்து மொத்தம் ஆறு நபர்கள் கூட்டாக இருந்து மேற்படி கோவில்களுக்கு டிரஸ்டி என்ற அடிப்படையில் தாவா சொத்தினை கிரையம் பெற்றுள்ளது தெரியவருகிறது. மேலும் மேற்படி ம.சா.ஆ.1ல் "ஊர்க்கால சுவாமி கோவிலுக்காகவும், மேற்படி கோவிலின் பக்கத்தில் ஸ்தாபிதம் செய்யப்பட்டிருக்கும் சின்னன்சாமி கோவிலுக்குமாக பூசாரியும் டிரஸ்டியுமான" எனக்குறிப்பிட்டு கிரையம் பெற்றுள்ளது தெரியவருகிறது. அதன்படி மேற்படி ம.சா.ஆ.1 கிரைய ஆவண சொத்து ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவிலுக்காக வாங்கப்பட்டதாகவோ அல்லது ம.சா.ஆ.1 ஏற்பட்ட காலகட்டத்தில் தாவா சொத்திலோ அல்லது தாவா சொத்தின் அருகிலோ ஸ்ரீசக்தி மாரியம்மன் கோயில் இருந்ததாகவோ ம.சா.ஆ.1ல் எவ்வித குறிப்புகளும் இல்லை. ஆனால் மனு பாரா 3ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

பாரா 3 – மனுச்சொத்து கச்சைக்கட்டி கிராமம், தெற்கு தெருவில் உள்ளது. வழக்கிடைச் சொத்தின் வடபுரம் பள்ளர்களுக்கு பாத்தியப்பட்ட ஊர்காவலன் சுவாமி கோவிலும், தென்புரம் சின்னணன் சுவாமி கோவிலும் உள்ளது. மனுச்சொத்து மேற்படி ஊர்க்காவலன், சின்னண சுவாமி கோவிலுக்கு அருகிலேயே இருப்பதால் மேற்கொண்டு அதில் கோவில் மற்றும் பிரகாரம் கட்டிக்கொள்வதன் அடிப்படையில் தான் மனுச்சொத்து கிரையம் பெறப்பட்டது. கச்சைக்கட்டி கிராமத்தில் பள்ளர்கள் இனத்தைச் சார்ந்தவர்கள் தெற்கு தெருவிலும், வடக்கு தெருவிலும் குடியிருந்து வருகிறார்கள். மேற்படி 6 டிரஸ்டிகளும் பள்ளர் இன மக்களின் நலனைக் கருத்தில் கொண்டு தெற்கு தெருவிலும், வடக்கு தெருவிலும் தனித்தனியாக கோவில்கள் கட்டி கொள்வது என ஏகோபித்த முடிவு செய்ததின் அடிப்படையில் தெற்கு தெருவில் ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவிலும், வடக்கு தெருவில் மாரியம்மன் கோவிலும் கட்டிக்கொள்வது என முடிவு செய்யப்பட்டது. மனுச்சொத்தின் வடபுரம் ஊர்க்காவலன் கோவிலையும், தென்புரமுள்ள சின்னணன் சுவாமி கோவிலையும் மற்றும் மனுச்சொத்தையும் என்னுடைய தாத்தா நாகுக்குடும்பனும், சந்தனக்குடும்பனும் பூசாரி மற்றும் பரம்பரை டிரஸ்டிகளாக இருந்து வர வேண்டியது என டிரஸ்டிகளால் முடிவு செய்யப்பட்டது. மேற்படி 6 டிரஸ்டிகளில் பிச்சைக்குடும்பன், கூத்தக்குடும்பன், பாப்பக்குடும்பன், பழனியாண்டிக்குடும்பன் ஆகிய நால்வரும் வடக்கு தெருவில் மாரியம்மன் கோவில் கட்டிக்கொள்வது என்றும், அதேபோல் தெற்கு தெருவில் வாதிகளின் தாத்தா நாகுக்குடும்பனும், சந்தனக்குடும்பனும் ஸ்ரீ சக்தி மாரியம்மன் கோவில் கட்டிக்கொண்டு பூசாரிகளாகவும், டிரஸ்டிகளாகவும் இருந்து கொண்டு கோவில்களை பராமரித்துக்கொள்வது என்றும் முடிவு செய்யப்பட்டது" **எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், எதிர்மனுதாரர் தரப்பு எதிருரை பாரா 16ல் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.**

பாரா 16 – வழக்கிடைச் சொத்திலுள்ள கோவிலான ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில், ஊர்க்காவலன் கோவில், சின்னணன் சுவாமி கோவில் மட்டும் உள்ளது என்றும், மேற்படி வாதி கூறுவது போல் விநாயகர், உச்சிகாளியம்மன், பகவதியம்மன், மலைக்காரன் மண்டு, சந்தனக்கருப்பு மற்றும் சின்ன மாரியம்மன் கோவில் சிலைகளும் மற்றும் பிரகாரங்கள் இல்லை என்றும், இவைகள் வழக்கிடை சொத்திற்கு அப்பாற்பட்ட இடத்தில் உள்ளது" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி ஸ்ரீசக்தி மாரியம்மன் சுவாமி கோவில், மேற்படி ஊர்க்கால சுவாமி மற்றும் சின்னன்சுவாமி அருகேயுள்ளது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட பொருண்மையாக உள்ளது. மனுதாரர் தரப்பில் தாவா சொத்திலுள்ள அனைத்து கோவில்களிலும் மனுதாரர்/வாதியானவர் பூசாரி மற்றும் பரம்பரை டிரஸ்டியாக செயல்பட்டு வருவதாக வாதுரைக்கப்பட்டது. ஆனால் சொத்து விபரத்தில் தாவா சொத்தில் எந்தெந்த கோவில்கள் அமைந்துள்ளது என்ற விபரம் குறிப்பிடவில்லை. உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டப்பிரிவு கட்டளை 7 விதி 3ன்படி சொத்து விபரம் தெளிவாக குறிப்பிடாத பட்சத்தில் வழக்கு பரிகாரம் கிடைக்கக்கூடியதில்லை என்பது நிலைநிறுத்தப்பட்ட சட்டக்கோட்பாடாகும். மேற்படி சட்டப்பிரிவிலும் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

Order VII Rule 3

3. where the subject-matter of the suit is immovable property. - Where the subject-matter of the suit is immovable property, the plait shall contain a description of the property sufficient to identify, it and, in case such property can be identified by boundaries of numbers in a record of settlement or survey, the plaint shall specify such boundaries or numbers.

இது தொடர்பாக மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற அடியிற்கண்ட வழக்கில் முன்தீர்ப்பு வழங்கப்பட்டு, **2012 (1) TNCJ 649 (Mad) (MB)** என்ற சட்ட இதழில் பதிவுகளும் ஏற்பட்டுள்ளது.

AM. Kothandaramasamy Koil Thirupuvanam (vs) Vairam and others, "Order 7 Rule 3 " Specific Relief Act 1963 – Section 39 Mandatory Injunction: plaint completely lacking proper description of suit property so as to identify same – Hence injunction cannot be granted. எனவே தாவா சொத்தில் மனுதாரர்/வாதி குறிப்பிடும் அனைத்து கோவில்களும் கட்டப்பட்டுள்ளது என்ற வாதம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) அதேபோல் ம.சா.ஆ.2 ஆகிய WP (MD) No. 7850/2018 மனுவிலும் மனுதாரர்/வாதியானவர் ஸ்ரீசக்திமாரியம்மன் கோவில் திருவிழாவிற்கான விழாக்குழு உறுப்பினர்

என்ற அடிப்படையில் மட்டுமே மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், அவர் பூசாரியாகவோ பரம்பரை டிரஸ்டியாகவோ இருந்து வரவில்லை என எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டது. ஆனால் 1ம் பிரதிவாதியானவர் தாவா கோவிலுக்கு பூசாரி மற்றும் பரம்பரை டிரஸ்டியாக இருந்து வருவதற்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களையும் தாக்கல் செய்யப்படாத நிலையில், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு மேற்படி எதிர்வாதம் சட்டப்படி ஏற்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. ஏனெனில் இம்மனு பரிகாரத்திற்கு கோயில் பராமரிப்பு, நிர்வாகம் தொடர்பாக மனுதாரர்/வாதி நடவடிக்கை எடுத்தது தொடர்பான பொருண்மை மட்டுமே பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டியதே தவிர அவர் எந்த பதவி அடிப்படையில் நடவடிக்கை எடுத்தார் என்பது அசல் வழக்கில் இருதரப்பினர்களின் சாட்சி சான்றாவணத்தின்படியே தீர்வு காணக்கூடியது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

11) மேலும், ம.சா.ஆ.3 ஆக மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் திருப்பணிக்குழு அங்கீகரித்தும் ரூ.50,000/- திருக்கோயில் திருப்பணி திட்டத்திற்கு இந்து சமய அறநிலையத்துறையால் சின்ன மாரியம்மன் திருக்கோவிலுக்காக வழங்கப்பட்டுள்ளது என்றும், மேற்படி ஆவணத்திற்கும் தாவா ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவிலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லையென எதிர்மனுதாரர்கள் தரப்பில் எதிர்வாதம் செய்யப்பட்டது. ஆனால் மேற்படி பொருண்மைகளை பிரதிவாதிகள் தரப்பில் அசல் வழக்கில் தாக்கல் செய்த எதிர்வழக்குரை மற்றும் இம்மனுவிற்கான எதிர்உரையில் குறிப்பிடவில்லை. மேலும் மேற்படி ம.சா.ஆ.3 ஆவணத்தின்படி மனுதாரர்/வாதி திருப்பணி குழுவின் தலைவராக உள்ள நிலையில், உறுப்பினராக இந்த வழக்கின் 1ம் பிரதிவாதியாகிய கருப்பு என்பவரும், 11வது பிரதிவாதியாகிய ராஜமாணிக்கம் என்பவரும், 12ம் பிரதிவாதியாகிய பிரேம்குமார் என்பவரும் குறிப்பிட்டு மேற்படி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது தெரியவருகிறது. ஆனால் எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி பொருண்மைகளை மறுக்கவில்லை. அதேபோல் பிராதுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள 5 முதல் 7 வரையிலான ஆவணங்களானது தேர்தல் அலுவலர் நடவடிக்கை மற்றும் மின்வாரிய உதவி மின்பொறியாளர் மற்றும் வாடிப்பட்டி சார்பு ஆய்வாளர் ஆகியோர்கள் வழங்கிய சான்றிதழ்கள் ஆகியவற்றில் மனுதாரர்/வாதியானவர் மேற்படி திருக்கோவிலில் நிர்வாகியாக செயல்பட்டு வந்ததை உறுதி செய்யும் விதமாக கடிதங்களும், சான்றிதழ்களும் வழங்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது.

12) மேற்படி ம.சா.ஆ.5 ஆகிய ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் திருவிழா தேர்தல் சமயத்தில் நடத்த அனுமதி கோரி தாக்கல் செய்த மனுவிற்கு பாராளுமன்ற தேர்தல் நடத்தும் அலுவலர்களால் வழங்கப்பட்ட அனுமதி கடிதத்தில் மனுதாரர்/வாதி நாகலிங்கம் என்பவர் நிர்வாகி என்ற அடிப்படையில் 04.04.2019ம் தேதியில் மனு கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் ம.சா.ஆ.6 ஆகிய மின் வாரியத்தால் வழங்கப்பட்ட சான்றிதழை பரிசீலனை செய்யும்பொழுது,

அதில் மனுதாரர்/வாதி ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவிலுக்கு மின் கட்டணத்தை செலுத்தி வந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதேபோல் ம.சா.ஆ.7 ஆகிய வாடிப்பட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளரால் வழங்கிய சான்றிதழில் அடியிற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

> வாடிப்பட்டி காவல் சரகம், கச்சைகட்டி கிராமம், தெற்கு தெருவிலிருக்கும் ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் பூசாரியும், டிரஸ்ட்டியுமான திரு. K. நாகலிங்கம் த/பெ. கருப்பையா அவர்கள் கடந்த 2008ம் ஆண்டு முதல் இதுவரை ஒவ்வொரு பங்குனி மாத திருவிழா கார்த்திகை தீபம் மற்றும் மாசி வேட்டை ஆகிய திருவிழா காலங்களில் பாதுகாப்பு வேண்டி மனு விண்ணப்பித்து அவரது மனுவை பரிசீலனை செய்து மேற்கண்ட திருவிழாக்களுக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டது என இதன் மூலம் சான்றளிக்கிறேன் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

13) அதேபோல் 8 மற்றும் 9 ஆகிய ஆவணங்கள் தாவா சொத்தில் உள்ள திருக்கோவில் சாமி கும்பிடுவது தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டதால், அதன் தொடர்ச்சியாக மனுதாரர்/வாதியால் காவல்நிலைய புகார் கொடுக்கப்பட்டுள்ளதும், 1ம் பிரதிவாதி மற்றும் இதர நபர்களின் மீது குற்ற எண். 907/2020ன்படி குற்ற வழக்கு தாக்கல் பதிவு செய்யப்பட்டுள்ளதும் தெரியவருகிறது. எனவே ஸ்ரீசக்தி மாரியம்மன் திருக்கோவிலில் மனுதாரர்/வாதி நிர்வாகி என்ற அடிப்படையிலும் பூசாரி என்ற அடிப்படையிலும் பரம்பரை டிரஸ்டி என்ற அடிப்படையிலும் செயல்பட்டு வந்ததற்கு ஆதரவாக ம.சா.ஆ.1 முதல் 9 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் மேற்படி ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் மற்றும் இதர கோவில்களில் பூசாரி மற்றும் பரம்பரை டிரஸ்டியாக செயல்பட்டு வந்ததற்கு ஆதரவாக எவ்வித ஆவணங்களும் தாக்கல் செய்யப்படாத நிலையிலும், மனுதாரர்/வாதி கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது.

14) மேலும், மனுதாரர்/வாதியானவர் தரப்பில் தாவா சொத்தில் அமைந்துள்ள ஸ்ரீசக்தி மாரியம்மன் திருக்கோவில் மற்றும் ஊர்காவலன் கோவில், சின்னணன் சாமி கோவில் ஆகியவை தெற்கு தெருவில் இருப்பதாகவும், அதேபோல் வடக்கு தெருவில் மாரியம்மன் கோவில் மற்றும் அதனை சேர்ந்த பல கோவில்கள் இருப்பதாகவும், இந்த நிர் மனு மற்றும் அசல் வழக்கு பிராதிலும் வாதுரைக்கப்பட்டுள்ளது. ஆனால் மனுவுடன் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அனைத்தும் ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் சம்பந்தப்பட்ட ஆவணங்களாக மட்டுமே உள்ளது. மேலும், ம.சா.ஆ.1 ஆவணமும் "ஊர்க்கால சுவாமி மற்றும் சின்னன்சாமி கோயில்களுக்காக பூசாரி மற்றும் டிரஸ்டிகள் பெயரில் தாவா சொத்து வாங்கப்பட்டதாக உள்ளது. மேலும், மனுதாரர் தரப்பு ஆவணங்களும் ஸ்ரீசக்தி மாரியம்மன் கோயிலுக்குரியதாக தான் உள்ளதே தவிர ஊர்க்கால சாமி மற்றும் சின்னன் சாமி தொடர்பானதாக இல்லை. எனவே, மேற்படி மனுதாரர் தரப்பு ஆவணங்களின் அடிப்படையில் ஊர்க்கால சாமி மற்றும் சின்னன் சாமி கோயில் மற்றும்

மனுதாரர்/வாதி குறிப்பிடும் இதர சாமிகள் மற்றும் கோயில்களின் வழிபாடு பூஜை முறை நிர்வாகம் தொடர்பாக அசல் வழக்கில் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் சாட்சிய விசாரணையின் இறுதியில் மட்டுமே தீர்வு காண இயலும் என்றும், அதன்பேரில் மேற்படி ஊர்க்கால சுவாமி மற்றும் சின்னன்சாமி மற்றும் இதர தெய்வங்கள் மற்றும் கோயில்களின் பூசாரி மற்றும் பரம்பரை டிரஸ்டி மற்றும் வழிபாடு தொடர்பாக இம்மனு பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. அதேபோல் தாவா சொத்தில் தான் ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் அமைந்துள்ளதா என்பதையும் அசல் வழக்கில் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையில் மட்டுமே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனினும் மனுதாரர் தரப்பு ஆவணங்களின்படி ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் சார்பாக மனுதாரர்/வாதி நடவடிக்கை எடுத்துள்ள பொருண்மை உறுதியாகிறது. எனவே மனுதார்/வாதி ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் தவிர இதர தெய்வ வழிபாடு மற்றும் கோவில்களில் பரம்பரை பூசாரியாக இருந்து வருகின்றாரா என்ற பொருண்மையினை அசல் வழக்கு விசாரணையில் இருதரப்பு சாட்சிய சான்றாவணங்களின் அடிப்படையிலே தீர்வு காண இயலும் என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவிலை தவிர்த்து பிற கோவில்களுக்கு மனுதாரர்/வாதி கோரும் மனுப்பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றே இந்நீதிமன்றம் தீர்வு காண்கிறது.

எனவே, "ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவிலை பொறுத்து மட்டும் மனுதாரர்/வாதி கோரியுள்ள பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு கிடைக்கத்தக்கது என தீர்வு காணப்படுகின்றது. தாவா சொத்தில் அமைந்ததாக கூறப்படும் மற்ற தெய்வ வழிபாடுகள் மற்றும் கோவில்களை பொறுத்தமட்டில் மனு பரிகாரம் மனுதாரர்/வாதிக்கு கிடைக்கத்தக்கதல்ல என முடிவு செய்து அதனை பொறுத்து மனு தள்ளுபடி செய்தும் ஸ்ரீசக்தி மாரியம்மன் கோவில் வழிபாட்டினை பொறுத்து மட்டும் மனுதாரர்/வாதி கோரிய பரிகாரம் அனுமதித்தும் இம்மனுவானது பகுதியாக அனுமதிக்கப்படுகிறது.

இறுதியாக இம்மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. ஸ்ரீசக்தி மாரியம்மன் திருக்கோவிலை பொறுத்தும் மட்டும் வாதி கோரியபடி மனுதாரர்/வாதியின் பூசாரி மற்றும் பரம்பரை டிரஸ்டி நிர்வாக உரிமைக்கு எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவரது ஆட்களோ, அவரது முகவர்களோ எவ்வித இடையூறும் செய்யக்கூடாதென அசல் வழக்கு முடியும் வரை தற்காலிக உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி உத்திரவிடப்படுகிறது. தாவா சொத்தில் அமைந்துள்ள இதர தெய்வ வழிபாடு மற்றும் கோவில்களை பொறுத்தமட்டில் மனுதாரர்/வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என தீர்வு கண்டு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவு தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரிடையாக சொல்லப்பட்டு அவரால் கணிணியில் விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்ட பின்னர் 2022ம் ஆண்டு மார்ச் மாதம் 17ஆம் நாள் அவையறியப் பகரப்பட்டது.

D RAMGANESH Digitally signed by D RAMGANESH Date: 2022.03.17 17:02:05 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாடிப்பட்டி.

மனுதாரர்/வாதி தரப்பு சான்றாவணங்கள்

ம.சா.ஆ.1 - 18.03.1941ம் தேதியிட்ட கிரைய பத்திரம் சான்று நகல்

ம.சா.ஆ.2 - WP(MD) No 7850/2018ல் பிறப்பிக்கப்பட்ட மாண்புமிகு உயர்நீதிமன்ற உத்தரவு அசல்

ம.சா.ஆ.3 - 14.12.2013ம் தேதியிட்ட இந்து சமய அறநிலையத்துறை செயல்முறை நடவடிக்கை அசல்

ம.சா.ஆ.4 - 03.10.1981ம் தேதியிட்ட உயில் சாசனம் அசல்

ம.சா.ஆ.5 - 04.04.2019ம் தேதியிட்ட உதவி தேர்தல் நடத்து அலுவலர் நடவடிக்கைகள் அசல்

ம.சா.ஆ.6 -27.7.2013ம் தேதியில் மின்சார வாரியத்தால் அனுப்பப்பட்ட கடிதம் அசல்

ம.சா.ஆ.7 - 16.06.2013ம் தேதியிட்ட வாடிப்பட்டி காவல்நிலைய சார்பு ஆய்வாளர் சான்று அசல்.

ம.சா.ஆ.8 - 19.04.2020 புகார் மனு ரசீது கணினி நகல்

ம.சா.ஆ.9 - 03.06.2020 குற்ற எண் 907/2020 உண்மை நகல்

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சான்றாவணங்கள் : இல்லை

D RAMGANESH Digitally signed by D RAMGANESH Date: 2022.03.17 17:02:38 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

வாடிப்பட்டி.